பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

17 04 2025 THURSDAY 7.15 PM

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

- சட்ட மசோதாக்கள் மீது முடிவெடுப்பதற்கு குடியரசுத் தலைவருக்கு காலக்கெடு விதித்து உச்சநீதிமன்றம் அண்மையில் பிறப்பித்த உத்தரவு கவலையளிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.
- நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மும்பை பங்குச்சந்தையின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.
- தொழில் அதிபர் Mehul Choksi-யை பெல்ஜியத்தில் இருந்து இந்தியா அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.
- உலக அளவில் வேகமான வளர்ச்சியை அடைந்துவரும் பொருளாதார நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாக ஐ நா வர்த்தக மேம்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது.
- ஐவரி கோஸ்டில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Prajwal Dev - ஜார்ஜியாவின் Aleksandre Bakshi இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-- இனி விரிவான செய்திகள்--

<<<<<<>>>>>

சட்ட மசோதாக்கள் மீது முடிவெடுப்பதற்கு குடியரசுத் தலைவருக்கு காலக்கெடு விதித்து உச்சநீதிமன்றம் அண்மையில் பிறப்பித்த உத்தரவு கவலையளிப்பதாக குடியரசு துணைத்தலைவர் திரு ஜெக்தீப் தங்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று மாநிலங்களவை உறுப்பினர்களுக்கான ஆறாவது பயிற்சி மாநாட்டில் உரையாற்றிய அவர், நீதிபதிகள் சூப்பர் நாடாளுமன்றம் போன்று செயல்படுவது ஜனநாயக மரபுக்கு முரணானது என்று கூறினார்.

அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் ஒவ்வொரு அமைப்பும் மிகுந்த பொறுப்புணர்வுடன் செயல்பட வேண்டியது அவசியம் என்று குடியரசு துணைத்தலைவர் குறிப்பிட்டார்.

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் நிர்வாகம் மற்றும் கொள்கைகள் தொடர்பாக நாடாளுமன்றத்தில் கேள்விகள் எழுப்பப்படும்போது, அவற்றுக்கு பதிலளிக்கும் கடமை அந்த அரசுக்கு உள்ளதாக அவர் தெரிவித்தார்.

அதேசமயம், அரசு அல்லாத பிற அமைப்புகள், நிர்வாகம் மற்றும் கொள்கைகளில் தலையிடும்போது அது தொடர்பாக நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்ப இடமில்லாமல் போய்விடும் என்று திரு ஜெக்தீப் தங்கர் அதிருப்தி வெளியிட்டார

<<<<<<>>>>>

நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் மும்பை பங்குச்சந்தையான சென்செக்ஸின் பங்களிப்பு முக்கியத்துவம் வாய்ந்தது என்று நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் கூறியுள்ளார்.

மும்பை பங்குச்சந்தையின் 150-ஆவது ஆண்டு கொண்டாட்டங்களில் சிறப்பு விருந்தினராக பங்கேற்று அவர் பேசினார்.

ஆசியாவின் மிகவும் பழமை வாய்ந்த பங்குச்சந்தையாக சென்செக்ஸ் திகழ்வதாகவும், இந்த நிகழ்வு வரலாற்று சிறப்புமிக்கது என்று அவர் குறிப்பிட்டார்.

மும்பை பங்குச்சந்தையை பொறுத்தவரை தினமும் ஆயிரத்து 500 கோடி ரூபாய் அளவுக்கு வர்த்தகம் நடைபெறுவதாகவும், இந்த பங்குச்சந்தையின் தொழில்நுட்ப முன்னேற்றம் பாராட்டத்தக்கது என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பங்குச்சந்தையின் அபரிமிதமான வளர்ச்சியால்தான் இந்திய பொருளாதாரம் முன்னேற்றப்பாதையில் செல்வதாகவும் திருமதி நிர்மலா சீதாராமன் கூறினார்.

<<<<<<>>>>>

நிதி முறைகேட்டில் தொடர்புடைய தொழில் அதிபர் Mehul Choksi-யை பெல்ஜியத்தில் இருந்து இந்தியா அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக வெளியுறவுத்துறை செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பெல்ஜியத்தில் கைது செய்யப்பட்டுள்ள அவரை, நாடு கடத்துவதற்கான கோரிக்கையை இந்தியா, அந்நாட்டிடம் அளித்திருப்பதாக கூறினார்.

மும்பை தாக்குதலில் முக்கிய குற்றவாளியான தஹாவூர் ராணாவை இந்தியாவுக்கு நாடு கடத்தியதன்மூலம், அந்த தாக்குதலில் தொடர்புடைய மற்றவர்களையும் நாடு கடத்த வேண்டியதன் அவசியத்தை பாகிஸ்தான் உணர வேண்டும் என்று அவர் கூறினார்.

உலக அளவில் தீவிரவாதத்தின் மையமாக விளங்கும் பாகிஸ்தான், இதுபோன்ற குற்றவாளிகளை பாதுகாத்து வருவதாக திரு ரன்தீர் ஜெய்ஷ்வால் குற்றம் சாட்டினார்.

<<<<<<>>>>>

வக்ஃப் திருத்தச் சட்டத்தின் அடிப்படையில் மத்திய வக்ஃப் கவுன்சில் மற்றும் மாநில வக்ஃப் வாரிய பதவிகளுக்கு புதிதாக யாரும் நியமிக்கப்பட மாட்டார்கள் என்று உச்சநீதிமன்றத்தில், மத்திய அரசு தெரிவித்துள்ளது.

வக்ஃப் திருத்தச் சட்டத்திற்கு இடைக்கால தடைகோரி தொடரப்பட்ட மனுக்கள் தொடர்பான விசாரணை இன்று மீண்டும் நடைபெற்றது.

அப்போது, அம்மனுக்களுக்கு ஏழு நாட்களில் மத்திய அரசு பதிலளிக்க வேண்டும் தலைமை நீதிபதி திரு சஞ்ஜீவ் கண்ணா தலைமையிலான அமர்வு உத்தரவிட்டது

மேலும், வக்ஃப் சொத்துக்கள் மற்றும் வக்ஃப் வாரியங்களின் தற்போதைய நிலையே தொடரும் என்றும், புதிய நியமனங்கள் ஏதும் மேற்கொள்ளப்படாது என்றும் மத்திய அரசின் சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜென்ரல் துஷார் மேத்தா தெரிவித்தார்.

இதையடுத்து, விசாரணை அடுத்த மாதம் 5-ஆம் தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

<<<<<<>>>>>

நேஷனல் ஹெரால்டு வழக்கில் காங்கிரஸ் மூத்த தலைவர்கள் திருமதி சோனியாகாந்தி, திரு ராகுல்காந்திக்கு எதிராக அமலாக்கத்துறை குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருப்பதை எதிர்த்து காங்கிரஸ் போராட்டம் நடத்துவது அர்த்தமற்றது என்று பிஜேபி குறை கூறியுள்ளது.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி மூத்த தலைவரும், மத்திய அமைச்சருமான திரு ஹர்தீப் சிங் புரி, இந்த வழக்கில் அமலாக்கத்துறை வெளிப்படையான விசாரணை நடத்தி இருப்பதாக கூறினார்.

தற்போது நடைபெற்றுவரும் விசாரணை புதியதல்ல என்று கூறிய அமைச்சர், கடந்த 2012-2013-ஆம் ஆண்டில் பிஜேபி ஆட்சிக்கு வருவதற்கு முன்னரே தொடங்கப்பட்டது என்றார்.

இந்த வழக்கை திசை திருப்ப காங்கிரஸ் கட்சி முயற்சி மேற்கொண்டதாகவும் திரு ஹர்தீப் சிங் புரி குறை கூறினார்.

<<<<<<>>>>>

காங்கிரஸ் பொதுச்செயலாளர் திருமதி பிரியங்கா காந்தியின் கணவர் திரு ராபர்ட் வதேரா முந்தைய காங்கிரஸ் ஆட்சியின்போது மிகப்பெரிய அளவில் முறைகேட்டில் ஈடுபட்டிருப்பதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

புதுதில்லியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய பிஜேபி செய்தித்தொடர்பாளர் திரு கவ்ரவ் பாட்டியா, முறைகேட்டில் ஈடுபட்ட திரு ராபர்ட் வதேராவை அப்போதைய காங்கிரஸ் கூட்டணி அரசு பாதுகாத்து வந்ததாக குறை கூறினார்.

முறைகேட்டில் பெறப்பட்ட ஒவ்வொரு பைசாவும் திரும்ப வசூலிக்கப்படும் என்றும் திரு கவ்ரவ் பாட்டியா உறுதியளித்தார்.

இதனிடையே, நில மோசடி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள திரு ராபர்ட் வதேரா, தில்லியில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்தில் மூன்றாவது நாளாக இன்றும் ஆஜரானார்.

<<<<<<>>>>>

உலக அளவில் வேகமான வளர்ச்சியை அடைந்துவரும் பொருளாதார நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாக ஐ நா வர்த்தக மேம்பாட்டு அமைப்பு தெரிவித்துள்ளது.

நடப்பாண்டில் இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி விகிதம் ஆறு புள்ளி ஐந்து சதவீதமாக இருக்கும் என்று அண்மையில் வெளியிடப்பட்ட அந்த அமைப்பின் அறிக்கை தெரிவிக்கிறது.

உலகின் பிற நாடுகள் பொருளாதார வளர்ச்சியில் பின்தங்கியிருப்பதாகவும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>

தமிழ் மொழியின் தொன்மையையும், பண்டைய கால தமிழக அரசியல், சமூக பொருளாதார வரலாற்றை வெளிப்படுத்தும் கல்வெட்டுகளை தொகுத்து மதுரையில் கல்வெட்டு அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு தங்கம் தென்னரசு தெரிவித்துள்ளார்.

சட்டப்பேரவையில் இன்று தொல்லியல் துறை மானியக்கோரிக்கை மீதான விவாதத்திற்கு பதிலளித்து, வெளியிட்ட அறிவிப்புகளில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

கீழடி மற்றும் பொருநை அருங்காட்சியகம், தரங்கம்பாடி கோட்டை ஆகியவற்றில் நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய ஒளி-ஒலி கண்காட்சி அமைக்கப்படும் என்பது உள்ளிட்ட பல்வேறு அறிவிப்புகளையும் திரு தங்கம் தென்னரசு வெளியிட்டார்.

<<<<<<>>>>>

உலக அளவில் 97-ஆவது மிகச்சிறந்த மருத்துவமனையாக தில்லி எயிம்ஸ் திகழ்கிறது என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டின் தலைசிறந்த மருத்துவமனைகள் தொடர்பாக, 30 நாடுகளை சேர்ந்த 2 ஆயிரத்து 400 மருத்துவமனைகள் தரபரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதில், தில்லி எயிம்ஸ் இந்த சிறப்பிடத்தை பெற்றுள்ளது.

உயர்தரம் வாய்ந்த சுகாதார சேவை, அதிநவீன மருத்துவ ஆராய்ச்சி மற்றும் லட்சக்கணக்கான மக்களுக்கு குறைந்த கட்டணத்தில் சிகிச்சை அளித்தல் போன்ற கூறுகளில் தில்லி எயிம்ஸ் 97-ஆவது இடத்தை பிடித்திருப்பதாக அந்த மதிப்பீட்டு அறிக்கை தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>

உலக Hemophilia ஒழிப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

Hemophilia நோய் என்பது இரத்தம் உறையாமையை குறிப்பதாகும்.

இந்நோய் மரபணு காரணமாகவும் ஏற்படுவதாக தெரியவருகிறது.

இந்த நோயை முற்றிலுமாக ஒழிப்பது குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், ஆண்டுதோறும் ஏப்ரல் 17-ஆம் தேதி இந்நாள் கடைபிடிக்கப்படுகிறது.

இந்நோயை முன்கூட்டியே கண்டறிந்து, உரிய சிகிச்சை அளித்தால், இரத்தம் உறையாமையை கட்டுப்படுத்த முடியும் என்று மருத்துவர்கள் தெரிவிக்கிறார்கள்.

இந்த நோயால் பெண்கள் மற்றும் சிறுமிகள் எதிர்கொள்ளும் சவால்களை முறியடிக்கும் வகையில், பல்வேறு நடவடிக்கைகளை மத்திய அரசு மேற்கொண்டு இருப்பதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சர் திரு ஜெ பி நட்டா தெரிவித்துள்ளார்.

அனைவருக்கும் தரமான சுகாதார சிகிச்சை வழங்கப்படுவதை அரசு உறுதி செய்திருப்பதாகவும் அவர் சமூக வலைதளத்தில் குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத் உள்ளிட்ட பல்வேறு இடங்களில் இன்று பெய்த ஆலங்கட்டி மழை காரணமாக ஐந்து பேர் உயிரிழந்தனர்.

பஞ்சாப், கைபர்பக்துன்வா உள்ளிட்ட மாகாணங்கள் இந்த மழையால் பெரிதும் பாதிக்கப்பட்டன.

வாகனங்கள் மற்றும் கட்டிடங்களின் மீது சிறிய அளவிலான பனிக்கட்டிகள் விழுந்ததாகவும், மழையால் ஏற்பட்ட வெள்ள நீர் சாலைகளில் பெருக்கெடுத்ததால் போக்குவரத்து பாதிக்கப்பட்டதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சுவர் இடிந்து விழுந்ததிலும், மின்னல் தாக்கியதிலும் ஐந்து பேர் உயிரிழந்திருப்பதாக அவர் மேலும் கூறினார்.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐவரி கோஸ்டில் நடைபெற்றுவரும் சர்வதேச சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Prajwal Dev - ஜார்ஜியாவின் Aleksandre Bakshi இணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

இன்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்த இணை, 6-3, 6-4 என்ற செட் கணக்கில், ஐவரி கோஸ்டின் Abdoulaziz - மொராக்கோவின் Younes Lalami இணையை வென்றது.

-------------

ஆசிய இளையோர் தடகள சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Tannu வெள்ளிப்பதக்கம் வென்றார்.

----------

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணிக்கு எதிரான ஆட்டத்தில் டாஸ் வென்ற மும்பை அணி முதலில் பந்து வீச்சை தேர்வு செய்துள்ளது.

மும்பையில் இப்போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ளது.

<<<<<<END>>>>